# சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்ளல்

## சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

216.01.014ஆம் திகதி வெளியிடப்பட்ட 1950ஆம் இலக்கத்தினையுடைய இலங்கை சனநாயக்க சோஷலிசக் குடியரசின் வர்த்தமானி மற்றும் 2016.01.29 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1952ஆம் இலக்க இலங்கை சனநாயக்க சோஷலிசக் குடியரசின் வர்த்தமானி ஆகியவற்றுக்கமைய 2016.09.18 மற்றும் 2017.04.01 ஆகிய திகதிகளில் நடாத்தப்பட்ட போட்டி பரீட்சையினதும் அதன் பொருட்டு நடாத்தப்பட்ட கட்டமைப்பு ரீதியான நேர்முகப்பரீட்சையினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் IIIஆம் தர சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்பட்டியல் மாவட்டங்களுக்கு ஏற்ப கீழே காட்டப்பட்டுள்ளது. குறித்த நியமனங்களை வழங்கும் வைபவம் கௌரவ சமூக வலுவூட்டல், நலன்புரி, மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர் திரு. எஸ்.பி. திசாநாயக்க அவர்களின் தலைமையில் 2017.11.15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறும்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தெரிவு செய்யும் போட்டி பரீட்சையின் பொருட்டு 78528 பேர் தோற்றியதுடன் அதில் 9316 பேர் மட்டுமே சித்தியடைந்துள்ளனர். மாவட்டங்களுக்கமைய தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைகளின் அடிப்படையில் சிங்கள, தமிழ் மொழிகளிலிருந்து 5578 பேர் நேர்முகப் பரீட்சையின் பொருட்டு அழைக்கப்பட்டனர். அங்கு பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் பெபேறுகளுக்கமைய கீழுள்ள உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 2009.02.20ஆம் திகதி வெளியிடப்பட்ட 1589/03 என்ற இலக்கத்தினையுடைய அதிவிசேட வர்த்தகமானியின் மூலம் வெளியிடப்பட்ட **“இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதி 77** இற்கமைய உறிய பிரகாரம் எழுத்து மூலப் பரீட்சை ஒன்றின் மூலம் மற்றும்/ அல்லது தொழில்சார் பரிசோதனையொன்றின் பின்னர் புள்ளிகள் வழங்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படுவதாயின் விண்ணப்பதாரிகள் எழுத்து மூல பரீட்சையில் மற்றும்/ அல்லது தொழில்சார் பரிசோதனையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் நேர்முகப்பரீட்சைக் குழுவிற்கு வழங்கப்படலாகாது. எக்காரணத்தினாலும் எழுத்து மூலப் பரீட்சையின் மற்றும்/ அல்லது தொழில்சார் பரிசோதனையின் பெறுபேற்றினை நியமன மேலதிகாரியினால் நியமனம் தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் வரை பகிரங்கப்படுத்தலாகாது. அதன் இரகசிய தன்மையினை உயர்ந்தபட்சத்தில் பாதுகாத்தல் வேண்டும். அதன் பிரகாரம் 2017.11.15ஆம் திகதி நியமனம் வழங்கிய பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெபேறுகள் அவர்களது பிரத்தியேக முகவரிகளுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு தெரிவு செய்யப்பட்டவர்கள் 2017.11.16ஆம் திகதி உறிய மாவட்டச் செயலகங்களுக்கு அறிக்கையிட வேண்டியதுடன் அதன் பின்னர் இலங்கை இராணுவத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தலைமைத்துவப் பயிற்சித்திட்டத்தில் கலந்து கொள்ளல் வேண்டும். அதற்குறிய ஆலோசனைகள் பெயர்ப்பட்டிலின் பின்னர் காட்டப்பட்டுள்ளது.